**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**
**CC No. 25/2024**

| | |
|---|---|
| Ranking of Witness | **PW.1** |
| Name | கல்யாண குமார் |
| Father's Name | வெள்ளைசாமி |
| Age | 53 |
| Address | 34, 4வது குறுக்கு தெரு, ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2026.

**(2ம் எதிரி ஆஜரின்மைக்காக பிரிவு 317 Cr.p.c ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1ம் எதிரி காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார், 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை –

நான் கட்டுமான தொழில் செய்து வருகிறேன். நான் அம்மா பகவான் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் கட்டுமான தொழில் செய்து வருகிறேன். அம்மா பகவான் என்பது பூந்தமல்லியில் உள்ள நியமம் என்ற இடத்திலுள்ள கோவிலாகும். நான் அதன் ஒரு பக்தன் ஆவேன். அம்மா பகவான் ஆலயத்தில் லோகேஷ் தாஸ் என்பவர் எனக்கு அறிமுகமானார். அவர் தடாவிலுள்ள அம்மா பகவான் ஆலயத்தில் உள்ளவர். 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு நாள் லோகேஷ்தாஸ் எனக்கு போன் செய்து திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வருமாறும், அங்கு ஒரு புகார் அளிக்கவேண்டும் என்றும் சொன்னார். அதன்படி நான் திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கு லோகேஷ்தாஸ் இருந்தார். அவர் என்னிடம் அம்மா பகவான் தொடர்பாக ஒரு புகார் அளிக்க இருப்பதாக சொன்னார். ஏற்கனவே தயார் செய்து அவர் எடுத்து வந்த அந்த புகாரில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். அந்த புகாரை நான் படித்துப் பார்க்கவில்லை. அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தான் அது. புகாரிலுள்ள அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.1**. அதன் பிறகு என்னை CBI போலிசார் விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை திருவள்ளூர்

31/7/26 V.W 31/7/26

நீதிமன்றத்திற்கு அழைத்தார்கள். அங்கு நான் நீதிபதி முன்பு நடந்த விவரத்தை வாக்குமூலமாக கொடுத்தேன்.

**2ம் எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் முதலில் BE பொறியியல் படித்தேன். அதன்பிறகு சட்டம் படித்தேன். ஆரம்பத்தில் தமிழ்நாடு Bar council ல் வழக்கறிஞராக பதிவு செய்தேன். வழக்கறிஞர் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. அம்மா பகவான் கட்டுமான நிறுவனத்தில் நானும், என் மனைவியும் மட்டும் பங்குதாரர்களாக உள்ளோம். லோகேஷ்தாஸ் தயார் செய்து எடுத்து வந்த புகாரில் நான் கையெழுத்திட்டு கொடுத்ததை கொண்டு திருவள்ளூர் மாவட்ட குற்றப்பிரிவில் முதல் தகவல் அறிக்கை குற்ற எண். 35/2019 பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த வழக்கை விசாரணைச் செய்த புலன்விசாரணை அதிகாரி அந்த புகார் தொடர்பாக என்னை விசாரிக்கவில்லை. அந்த வழக்கில் பாபு என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. லோகேஷ்தாஸ் எங்கு குடியிருக்கிறார், அவரது தந்தை பெயர் என்ன, என்ன தொழில் செய்கிறார் என்ற விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் அவர் தடாவிலுள்ள அம்மா பகவான் கோவிலில் பக்தராக இருந்து அதன் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துரைத்து சன்னியாசியாக இருந்தார். அதை தவிர அவரது தந்தையார் பெயர் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது. லோகேஷ்தாஸ் கோவிலை தவிர வேறு என்ன தொழில் செய்கிறார் என்ற விவரங்கள் எனக்குத் தெரியாது. NKV கிருஷ்ணா என்பவரை எனக்குத் தெரியாது. NKV கிருஷ்ணாவுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. லோகேஷ்தாஸ்க்கும், NKV கிருஷ்ணாவிற்கும் இடையில் என்ன தொடர்பு உள்ளது என்று எனக்குத் தெரியாது. புகாரைப் படிக்காமல் கையெழுத்துப் போட்டேன் என்ற விவரத்தை திருவள்ளூர் நீதித்துறை நடுவரிடமும் CBI போலிசார் விசாரித்த போதும் குறிப்பிட்டு கூறினேனா என்றால் கூறினேன். எனக்கு கிருஷ்ணா ஜி என்பவரை எனக்குத் தெரியும், அவர் தான் NKV கிருஷ்ணாவா என்று எனக்குத் தெரியாது. வழக்கறிஞராகவும், பொறியியல் படிப்பும் படித்து, கட்டுமான தொழில் செய்து வரும் நான் புகாரைப் படிக்காமல் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்று கூறுவது முழுக்க முழுக்க பொய் என்று சொன்னால் சரியல்ல. அரவிந்த் என்பவர் யார் என்று எனக்குத் தெரியாது. புகாரில் அரவிந்த் என்ற நண்பர் மூலமாக அம்மா பகவான் என்ற பெயரில் கட்டுமான நிறுவனம் தொடங்க ரூ.2,00,00,000/– கடன் பெறவேண்டி அவரை அணுகியதாகவும், அதன் தொடர்ச்சியாக 19.10.2019 அன்று காலை 11.52 மணியளவில் அரவிந்த் அவர்களின்

3/7/26 V.K 3/7/26

அலைபேசி எண்.9959710444 ற்கு தொலைபேசி எண்.911123012312 லிருந்து அழைப்பு வந்ததாகவும் அதில் டெல்லியிலிருந்து பிரதமரின் அலுவலகத்திலிருந்து சட்ட செயலாளர் அலோக்ஸ்ரீவத்சவா என்பவர் பேசியதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அப்போது அரவிந்த் எனது மூன்று அலைபேசி எண்கள். 9951779579, 9866935557, 7603933809 ஆகியவற்றை அலோக்ஸ்ரீவத்சவா வழங்கி கடன் வழங்குமாறு தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதன்படி 29.10.2019 அன்று எனது அலைபேசி எண்.9951779579 என்ற எண்ணிற்கு தொலைபேசி எண்.911123012312 என்ற எண்ணிலிருந்து 12.19, 12.20 மணிக்கு அழைப்பு வந்தது என்றும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதே நாளில் சென்னையிலிருந்து 4428255051 என்ற தொலைபேசி எண்ணிலிருந்தும் எனக்கு அழைப்பு வந்ததாகவும், அதன் பேரில் மும்பையிலுள்ள எனது நண்பர்கள் அஜேய்மேத்தா, தேவ்கர் ஆகியோர் மூலம் ரூபாய் 20 லட்சம் பாபு என்பவருக்கு அனுப்பி வைத்ததாகவும், அவர்கள் இருவரின் அலைபேசி எண்களும், பாபு என்பவரின் அலைபேசி எண்ணும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அம்மா பகவான் என்பது ஒரு ஆன்மீக நிறுவனமாகும். அந்த நிறுவனத்தில் எனக்கு பக்தர் என்பதைத் தவிர வேறு பங்கு எதுவும் இல்லை. அந்த நிறுவனத்திற்கு ஏராளமான தங்க நகைகள், வைர நகைகள், வெளிநாட்டு பணங்கள் மற்றும் சொத்துக்கள் இருந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் வருமான வரி துறை சோதனை நடத்திய விவரம் பத்திரிக்கையில் வந்ததன் அடிப்படையில் அந்த விவரங்கள் எனக்குத் தெரியும். அம்மா பகவான் நிறுவனமானது மக்களை நல்வழிப்படுத்துவதற்கான ஒரு ஆன்மீக நிறுவனம் என்றால் சரிதான். அதற்கு சென்னை தடா தவிர வேறு இடங்களில் கிளைகள் உள்ளதா என்றால் வெவ்வேறு இடங்களில் பக்தர்கள் சிறு சிறு கோவில்களை கட்டி நடத்திவருகிறார்கள். நான் அளித்த புகாரிலுள்ள உண்மை விவரங்களை மறைத்து அம்மா பகவான் நிறுவனம் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகாரைப் படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டதாக குறிப்பிட்டுள்ளதானது வேண்டுமென்றே பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தெரிந்தே பொய்யான விவரங்களைக் குறிப்பிட்டு காவல் துறையில் புகார் அளித்தால் அது சட்டப்படி தண்டிக்கத்தக்க குற்றம் என்ற விவரம் சட்டம் படித்த எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.

V.Lal 31/7/24

**1ம் எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை**

(1ம் எதிரி சிறையிலிருந்து காணொளி வாயிலாக முன்னிலைப்படுத்தப்பட்டார், அவர் தரப்பில் வழக்கறிஞர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. நீதிமன்றம் அவர் தரப்பில் வழக்கறிஞர் நியமனம் செய்ய அறிவுறுத்தியபோது விரைவில் வழக்கறிஞரை நியமிப்பதாக தெரிவித்து சாட்சியை தற்சமயம் நேரடியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்குமாறு கோரினார்.)

1ம் எதிரித்தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை முழுவதுமாக ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. நான் 1ம் எதிரி சுகேஷ் சந்திரசேகரை பார்த்ததோ, பேசியதோ இல்லை. புகார் முழுவதும் வேண்டுமென்றே பொய்யான நோக்கத்தில் அம்மா பகவான் நிறுவன புகார்தாரர்கள் மூலமாக அளிக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன என்றும், என் சாட்சியம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த பணமும் நான் நேரடியாகவோ, வேறு நபர்கள் மூலமாகவோ 1ம் எதிரிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

V.W 31/7/26

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 31.07.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

31/7/26.

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.